# யாதவர் கல்லூரி

(யாதவர் கல்வி நிதி முகமையால் நிறுவப்பட்டது)
(இருபாலர் கல்லூரி & தன்னாட்சி)
தேசியத் தர மறு மதிப்பீட்டில் 'A' தகுதி பெற்றது (3ம் சுற்று)
கோவிந்தராசன் வளாகம், திருப்பாலை, மதுரை, தமிழ்நாடு – 625 014.
web : www.yadavacollege.org E-mail : yadavacollege69@gmail.com

## விழிப்புணர்வு பிரச்சாரம்
## நெகிழி இல்லா பசுமையான எதிர்காலம் நோக்கி

யாதவர் கல்லூரி வணிகவியல் துறை (தகவல் தொழில்நுட்பம்) விரிவாக்கப்பணி யாதவா கல்லூரி, மதுரை, வணிகவியல் துறை (தகவல் தொழில்நுட்பத்துறை) சார்பாக, "நெகிழி பயன்பாட்டைத் தடை செய்வதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி" என்ற தலைப்பில் ஒரு விரிவாக்கப்பணி செயல்பாடு 30.01.2026 அன்று காலை 10.30 மணிக்கு கூளப்பாண்டி கிராமத்தில், பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் இரண்டாமாண்டு வணிகவியல் துறை (தகவல் தொழில்நுட்பத்துறை மாணவர் செல்வன் திரு.S.பிரபஞ்சன் வரவேற்புரை நிகழ்த்தினார். யாதவர் கல்லூரியின் முதல்வர் முனைவர் C.ராஜு அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி, நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதில் கல்வி நிறுவனங்களின் பங்கை வலியுறுத்தினார். இந்நிகழ்ச்சியில் யாதவர் கல்லூரி தலைவர் திரு.S.ஜெயராமன், செயலாளர் திரு.R.V.N.கண்ணன், துணை முதல்வர் முனைவர் A.கிருஷ்ணவேணி மற்றும் சுயநிதிப் பாடப்பிரிவுகளின் இயக்குநர் முனைவர் A.ராஜகோபால் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். ஹோட்டல் பார்க் பிளாசா – மதுரை & சென்னை நிறுவனத்தின் தலைவர் திரு. KPS கண்ணன் அவர்கள் சிறப்பு உரையாற்றி, நெகிழி பயன்பாட்டினால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் தீமைகள் குறித்து விளக்கி, நிலையான எதிர்காலத்திற்காக சுற்றுச்சூழல் நடப்பு மாற்று வழிகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். நிகழ்ச்சி முடிவில் இரண்டாமாண்டு வணிகவியல் துறை (தகவல் தொழில்நுட்பத்துறை மாணவர் செல்வன் திரு.V. ஹரிஹரன் நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்வில் வணிகவியல் துறை (தகவல் தொழில்நுட்பத்துறை ஆசிரியர்கள் மாணவர்கள் கூளப்பாண்டி பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்






அறிக்கை தயாரித்தவர்
(கு.மருதராஜ்)

துறைத் தலைவர்
(ம.சியாமாளதேவி)

முதல்வர்
முனைவர் செ.ராஜு, எம்.ஏ.,எம்.பில்.,பிஎச்.டி.
முதல்வர்
யாதவர் கல்லூரி, மதுரை-625014